**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.48/2023**

**PW.3**

**Date: 15.05.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கார்த்திக் ராஜா | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | முருகன் | மதம் | |
| கிராமம் | படுர் | தொழில் | |
| வட்டம் | திருப்போருர் | வயது | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **15th day may 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை;</u>**

1. நான் டாட்டா ஏசி ஓட்டுநராக வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் **(1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்)** ஆகியவற்றில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடைய தான். கடந்த 29/04/2019 அன்று காலை சுமார் 8.15 மணியளவில் நான் கோவளம் சென்று கொண்டு இருந்தபோது டோல்கேட் அருகில் இருநபர்களை போலிசர் பிடித்து இருந்தார்கள். நான் அது குறித்து விசாரித்தேன். இருசக்கர வாகனம் திருட்டு சம்பந்தமாக

விசாரிப்பதாக சொன்னார்கள். தற்போது ஆஜரில் உள்ள 1 வது எதிரி தான் அவர் மற்றொருவர் ஓடிவிட்டார்.

2. 1வது எதிரி வாக்குமூலம் கொடுத்தார் அதன் பினனர் போலிசார் என்னை சென்னேரிகுப்பத்திற்கு அழைத்து சென்றார்கள் அங்கு 6 இருசக்கர வாகனங்களை கைப்பற்றினார்கள். Hero Honda splender, Pulser. Honda shine, Honda passion உள்ளிட்ட வானங்களை கைப்பற்றினார்கள். நான் அதற்காக தான் தற்போது காட்டிய கையொப்பம் செய்தேன். **(29/04/2019 தேதியிட்ட 1 மற்றும் 3 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் கைபற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் முறையே அ.சா.ஆ. 5 முதல் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

3. நான் மேற்கண்ட கையொப்பங்களை காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 மற்றும் 2 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரிகள் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**S/d- K.Nilavarasan, 15.05.2025**
Taken down by me in open court read over in
the witness in the presence of the accused and
admitted by the witness to be correct
**DM cum JM/TPR.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.48/2023**
**PW.2**
**Date:** 15.05.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சிவகுமார் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | ரங்கன் | மதம் | |
| கிராமம் | படுர் | தொழில் | |
| வட்டம் | திருப்போருர் | வயது | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **15th day may 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.
எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை;**

1. நான் லாரி ஓட்டுநராக வேலை செய்கிறேன். அ.சா. 1 என்னுடைய பக்கத்து வீட்டுகாரர். அ.சா. 1 யின் இருசக்கர வாகனம் திருட்டி போகியது அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருந்தார். கடந்த 28/04/2019 அன்று மாலை 7 மணியளவில் கேளம்பாக்கம் போலிசார் என்னை காவல் நிலையம் வர சொன்னார்கள். நான் சென்று இருந்தேன். அங்கு இருசக்கர வாகனங்கள் இருந்தது அதை அடையாளம்

காண்பிக்க சொன்னார்கள். நான் அடையாளம் காண்பித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் **(பார்வை மகஜர்)** உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடைய தான். **(28/04/2019 தேதியிட்ட பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கேட்டு கொண்டதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகிறது.**

2. கடந்த 28/04/2019 அன்று மாலை 7 மணியளவில் கேளம்பாக்கம் காவல் நிலைய போலிசார் கோளவம் அரசு மதுபான கடை அருகே அ.சா. 1 சிலம்பரசன் என்பவரின் இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்பந்தமாக அந்த இடத்தை பார்வையிட்டதற்கு நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையின் போது காட்டப்பட்ட (**அ.சா.ஆ.3)** கையொப்பம் அது என்றால் சரிதான். (**28/04/2019 தேதியிட்ட பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**<u>3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

3. தற்போது நான் குறிப்பிட்ட **(அ.சா.ஆ. 3)** கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால் சரிதான்.

**<u>1 மற்றும் 2 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரிகள் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**S/d– K.Nilavarasan, 15.05.2025**
Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct
**DM cum JM/TPR.**

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC.NO.48/2023**

**PW.1**

**Date: 15.05.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சிலம்பரசன் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | வெங்கடேசன் | மதம் | |
| கிராமம் | படுர் | தொழில் | |
| வட்டம் | திருப்போருர் | வயது | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **15th day may 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை;</u>**

1. நான் டிரேட்டர் ஓட்டுநராக வேலை செய்கிறேன். கடந்த 02/04/2019 நான் இரவு 7 மணியளவில் கோவளத்தில் கடற்கரை ஓரம் எனக்கு சொந்தமான Splender plus இருசக்கர வாகனத்தை நிறுத்தி இருந்தேன். மீண்டும் நான் 7.30 மணியளவில் பார்த்தபோது எனது இருசக்கர வாகனத்தை காணவில்லை. நான் அந்த வழிகளில் என்னுடைய இருசக்கர வாகனத்தை தேடி பார்த்தேன் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக நான் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் 08/04/2019 அன்று புகார் கொடுத்தேன். என்னுடைய வண்டியை நான் பல இடங்களில் தேடி பார்த்ததால் உடனடியாக புகார்

கொடுக்க இயலவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் **(புகார்)** உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்தது தான் **(28/04/2019 தேதியிட்ட புகார் அ.சா. ஆ,1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. அந்த மாதம் 28/04/2019 அன்று என்னுடைய இருசக்கர வாகனம் கிடைக்க பெற்றதாக போலிசார் தகவல் சொன்னதால் நான் கேளம்பாக்கம் காவல் நிலையம் சென்று பார்த்தேன். நான் என்னுடைய இருசக்கர வாகனத்தை இடைகால மனுவின் மூலமாக பெற்று கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது என்னுடைய இருசக்கர வாகனம் தான். **(புகைப்படம் 4 எண்ணிக்கை மற்றும் குறுந்தகடு ஆகியவை அ.சா.ஆ. 2 வரிசையாக ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னுடைய இருசக்கர வாகனம்ம காணாமல் போகும் அதன் மதிப்பு ரூ. 40 ஆயிரம் இருக்கும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

**<u>3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

3. என்னுடைய இருசக்கர வாகனத்தை யார் திருடியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>1 மற்றும் 2 ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

எதிரிகள் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**S/d– K.Nilavarasan, 15.05.2025**

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

**DM cum JM/TPR.**